**ஒரு விவசாயின் வெற்றிக் கதை:**

**ஜி. மணிவண்ணன்,**
**1/15, பக்கைசிவம் 2 வது வீதி,**
**ஈஸ்வரி நகர்,**
**அலைபேசி எண்: 9443155075.**



---

என் பெயர் மணிவண்ணன் எனது ஊர் தஞ்சாவூர், எனது அடிப்படையான பின்புலம் பேக்கரி தொழில். விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டுள்ள எனது நண்பனின் தோட்டத்திற்கு சென்ற பொழுது எனது சிந்தனையில் சிறு பொறி உண்டானது. 1995 ஆம் ஆண்டு விவசாய வியாபாரத்தில் ஈடுபட ஒரு யோசனை பிறந்தது. எனது சொந்த நிலத்தில் முந்திரி பயிரிட்டேன். மேலும் சில நிலங்களை வாங்கியதன் மூலம் விவசாயியாக மாறினேன்.

**எனது தோட்டத்தின் விபரம்:**
**பயிரிடப்பட்ட பயிர்கள்:**

- நெல்லி : 1100 மரங்கள்
- மா : 600 மரங்கள்
- தென்னை : 1800 மரங்கள்
- கரும்பு : 12 ஏக்கர்
- இடைவெளி மேர்கொண்டது : 25 அடி/மரம்
- மண்வகை : செம்மண்
- உரம் அளித்தது : மாட்டு சாணம்
- தொழிலாளர்கள் : 3/மரம்
- அறுவடை : 50 கிலோ/மரம்
- பயிரிடும் காலம் : செப்டம்பர் முதல் ஜனவரி வரை

**எனது வெற்றிக்கான காரணங்கள்:**

நான் இயற்கை வழி வேளாண்மையை கடைப்பிடித்தேன். பண்ணையின் பொருட்களை கொண்டு தயாரான உரங்களை பயன்படுத்தினேன். உற்பத்தி பொருட்களின் விற்பனைக்கு நான் தினசரி சந்தை நிலவரத்தின் கைபேசி சேவையின் மூலமாக பொருட்களுக்கான விலையை நிர்ணயித்து தரகர்களிடம் குத்தகைக்கு விட்டுவிடுவோம். உதாரணமாக, முன்னால் நெல்லிக்கு நாங்கள் ரூ.10 / கிலோவிற்கு பெற்றோம். கொச்சின் சந்தையில் ஒரு கிலோ ரூ.34.00 விற்பனையாவதை தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக அறிய முடிகிறது. இப்பொழுது நாங்கள் (DMI) தினசரி சந்தை நிலவரத்தினை பயன்படுத்துவது மூலமாக எங்கள் பொருட்களுக்கான விலையை பேரம்பேசி பெற முடிகிறது.

**DMI - தினசரி சந்தை நிலவரம் - பற்றி:**

நான் துல்லிய பண்ணையை வெளிப்படுத்தும் வருகையைக்கு சென்னை மற்றும் பெங்களூர் சந்தைக்கு செல்லும்பொழுது நான் தினசரி சந்தை நிலவரத்தை பற்றி அறிந்தேன். சந்தை தகவல்கள் கைபேசி மற்றும் இணைய தள சேவைமூலமாக வழங்குவதை அறிந்தேன். இதன் மூலமாக நான் பொருள்களின் விலையை உதாரணமாக நெல்லிக்கு கொச்சின் மற்றும் ஒட்டன்சத்திர சந்தையின் விலைகளை அறிந்தேன். தற்பொழுது நான் எனது பொருட்களை ஒட்டன்சத்திரம் அல்லது திருச்சூர் சந்தைக்கு அனுப்புகிறேன். DMI - தினசரி சந்தை நிலவரத்தின் உதவியினால் தினசரி விலை நிலவரங்களை அறிந்து கொண்டு எனது பொருட்களை சரியான விலைக்கு சந்தை படுத்த முடிகிறது. விற்ற பொருட்களுக்கான விலையையும் என்னால் சரிபார்க்க முடிகிறது. தினசரி சந்தை நிலவரத்தின் உதவியினால் எனது பொருட்களை விற்க சென்னை மற்றும் பெங்களூர் சந்தைகளுக்கு அனுப்ப திட்டமிட முடிகிறது. எனது தொழிலை லாபகரமானதாக தினசரி சந்தை நிலவரத்திற்கு நன்றி.